பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

08 02 2025 **SATURDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தில்லி சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியை கைப்பற்றும் நிலையில் உள்ளது.
    - **ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், முதலமைச்சர் திருமதி. அதிஷி பின்தங்கியுள்ளனர்.

- உத்தரபிரதேசத்தின் மில்கிபூர் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் பிஜேபியும், தமிழகத்தின் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை இடைத்தேர்தலில் திமுகவும் முன்னிலை வகிக்கின்றன.

- புதிய வருமான வரி சட்ட மசோதாவிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், ரிசர்வ் வங்கியின் மத்திய வாரிய இயக்குநர்களுடன் இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டார்.

- மும்பை ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>>>><<<<

தில்லி சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியை கைப்பற்றும் நிலையில் உள்ளது.

70 உறுப்பினர்களைக் கொண்ட தில்லி சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் வாக்கு எண்ணும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

70 தொகுதிகளுக்கும் முன்னணி நிலவரங்கள் தெரியவந்துள்ளன.

இதில் 48 தொகுதிகளில் பிஜேபி முன்னிலை வகிக்கிறது.

ஆம் ஆத்மி 22 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

காங்கிரஸ் கட்சி எந்த தொகுதியிலும் முன்னிலை பெறாமல் பின்னடைவை சந்தித்துள்ளது.

ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் முதலமைச்சருமான திரு. அரவிந்த் கெஜ்ரிவால் புதுதில்லி தொகுதியில் பின்தங்கியுள்ளார்.

அந்த தொகுதியில் 10வது சுற்று வாக்கு எண்ணிக்கை முடிவில், பிஜேபி வேட்பாளர் திரு. **Parvesh Sahib Singh** ஆயிரத்து 844 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

தில்லி முதலமைச்சரும், ஆம் ஆத்மி கட்சியின் வேட்பாளருமான திருமதி. அதிஷியும் கல்காஜி தொகுதியில் பின்தங்கியுள்ளார்.

அந்த தொகுதி வாக்கு எண்ணிக்கையின் 8வது சுற்று முடிவில் பிஜேபி வேட்பாளர் திரு. ரமேஷ் பிதூரி, ஆயிரத்து 911 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

ஜங்புரா தொகுதியில் ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த முன்னாள் துணை முதலமைச்சர் திரு. மனீஷ் சிசோடியாவும் பின்தங்கியுள்ளார்.

அந்த தொகுதியின் 9வது சுற்று வாக்கு எண்ணிக்கை முடிவில் அந்த தொகுதியின் பிஜேபி வேட்பாளர் திரு. **Tarvinder Singh Marwah,** 572 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

பிஜேபி 27 ஆண்டுகளுக்குப் பிறகு தில்லியில் ஆட்சியை கைப்பற்றும் நிலை உள்ளதை அடுத்து, அக்கட்சியின் தலைமையகத்தில் தொண்டர்கள் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும், மேள தாளங்களுடன் வெற்றியை கொண்டாடி வருகின்றனர்.

(சவுண்ட் பைட் - மேளதாளம் 35 செகண்ட்ஸ்)

தில்லி சட்டப்பேரவை தேர்தலோடு இடைத்தேர்தல் நடைபெற்ற உத்தரபிரதேசத்தின் மில்கிபூர் சட்டப்பேரவை தொகுதியிலும் பிஜேபி முன்னிலை பெற்றுள்ளது.

அக்கட்சியின் வேட்பாளர் திரு. **Chandrabhanu Paswan** தமக்கு அடுத்தபடியாக வந்த சமாஜ்வாதி கட்சியின் வேட்பாளர் திரு. அஜித் பிரசாத்தை விட 36 ஆயிரத்து 938 வாக்குகள் கூடுதலாக பெற்று முன்னிலை வகிக்கிறார்.

தமிழகத்தின் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் திரு. சந்திரகுமார் முன்னிலை வகிக்கிறார்.

இவர், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலெட்சுமியை விட 24 ஆயிரத்து 827 வாக்குகள் கூடுதலாக பெற்று முன்னிலையில் உள்ளார்.

**>>>>>>>>><<<<**

தில்லி சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் நல்லாட்சிக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பத்தாண்டுகளாக பொய்யுரைகளை மட்டும் கட்டவிழ்த்து ஆட்சியில் இருந்த அரவிந்த கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சியை மக்கள் முழுமையாக நிராகரித்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த வெற்றிக்காக பாடுபட்ட பிஜேபி தொண்டர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

தில்லி சட்டப்பேரவை தேர்தலில் ஊழலுக்கு எதிராக மக்கள் வாக்களித்திருப்பதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. வீரேந்திர சச்தேவா கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், ஆம் ஆத்மி கட்சியின் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், திரு. மனீஷ் சிசோடியா உள்ளிட்டோர் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருப்பதை சுட்டிக்காட்டினார்.

ஊழலுக்கு எதிராகவும், சிறந்த நிர்வாகத்திற்காகவும் தில்லி மக்கள் பிஜேபிக்கு வாக்களித்திருப்பதாகவும் திரு. வீரேந்திர சச்தேவா தெரிவித்தார்.

**>>>>>>>>><<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் நாடு விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக ஒடிசா முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி கூறியுள்ளார்.

இன்று புவனேஷ்வரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தில்லி சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி அதிக இடங்களில் முன்னிலை வகிப்பது, மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று அவர் கூறினார்.

தில்லியின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, வாக்காளர்கள் வாக்களித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இனி, தில்லி வளர்ச்சியின் பாதையில் செல்லும் என்றும் திரு. மோகன் சரண் மாஜி கூறினார்.

>>>>>>>>>><<<<

திறன் இந்தியா திட்டத்தை மாற்றியமைப்பதற்கும், நீட்டிப்பதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், 8 ஆயிரத்து 800 கோடி ரூபாய் செலவில் மாற்றியமைக்கப்பட்ட திறன் இந்தியா திட்டம் செயல்படுத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இளையோர் உரிய வேலைவாய்ப்புகளை பெற மத்திய அமைச்சரவையின் இந்த நடவடிக்கை உதவிடும் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

தகவல் ஒலிபரப்பரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகனும் மத்திய அமைச்சரவையின் இந்த முடிவுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இளையோரை திறன் மிக்கவர்களாக உருவாக்க வேண்டும் என்பதில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதியுடன் உள்ளதை இந்த முடிவு எடுத்துரைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், தூய்மைப் பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் பதவிக்காலத்தை மேலும் மூன்றாண்டுகளுக்கு மத்திய அமைச்சரவை நீட்டித்துள்ளதும் வரவேற்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

துப்புரவுப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தையும், வாழ்க்கை தரத்தையும் மேம்படுத்த மத்திய அமைச்சரவையின் இந்த முடிவு உத்வேகம் அளிக்கும் என்றும் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>>>>>>><<<<

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் உலகின் மிகப் பெரிய ஆன்மிக திருவிழாவான மகாகும்பமேளாவில் இன்று 42 லட்சத்திற்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளனர்.

இதுவரை 40 கோடிக்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கும்பமேளாவின் ஒரு பகுதியாக நாள்தோறும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

பக்தர்களின் வசதிக்காக பிரயாக்ராஜில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

துப்புரவுப் பணிகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக, பிரயாக்ராஜ் தூய்மையாக காட்சியளிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

>>>>>>>>>><<<<

புதிய வருமானவரி சட்ட மசோதாவிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இந்த மசோதா நாடாளுமன்றத்தில் அடுத்த வாரத்தில் தாக்கல் செய்யப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வருமான வரிச் சட்டத்தை எளிமைப்படுத்தும் நோக்கில் இந்த மசோதா வடிவமைக்கப்பட்டுள்ளது.

>>>>>>>>>><<<<

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், ரிசர்வ் வங்கியின் மத்திய வாரிய இயக்குநர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், பட்ஜெட் குறித்து அவர் எடுத்துரைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பிறகு இதுபோன்ற கூட்டத்தை நடத்துவது வழக்கமானது என்று அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>>>>><<<<

நாடுமுழுவதும் 2 லட்சம் அங்கன்வாடி மையங்கள் நவீனமயமாக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தை உறுதி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் புதிதாக 50 ஆயிரம் அங்கன்வாடி மையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் 338 அங்கன்வாடி மையங்கள் மேம்படுத்தப்படவுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>>><<<<

மும்பை ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-4, 3-6, 6-2 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Mei Yanaguchi** –யை வென்றார்.

>>>>>>>>><<<<

ஜெர்மனியில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் ஐந்தாவது சுற்று முடிவில் இந்தியாவின் குகேஷ், இரண்டு புள்ளிகளுடன் ஆறாவது இடத்தில் உள்ளார்.

>>>>>>>>>><<<<

மலேசியாவில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணியில் இடம்பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த கமலினி-க்கும் தில்லியில் நடைபெற்ற ஆடவர் கோகோ உலக கோப்பையை வென்ற இந்திய அணியில் இடம்பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த சுப்பிரமணி-க்கும் தலா 25 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகையை தமிழக அரசு அறிவித்துள்ளது.

>>>>>>END>>><<<<